[1997 ஏப்ரல் 24

**644—**

**சென்னை, அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல் கருவிகள் வழங்குதல்**

***4595—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, அரசு மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை அரங்கங்களுக்கு கருவிகள்/துணைக் கருவிகள் போதுமான அளவு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை அரசு மருத்துவமனைகளில் உள்ள அறுவைச் சிகிச்சை அரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் போதுமான அளவுக்குத் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகின்றன.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு சரி. இந்தக் கேள்வியைத் தொடுத்து சில மாதங்கள் ஆகின்றன. கடந்த காலத்தில் லம்பார் பஞ்சர் நீடில், கட்டிங் சுவீச்சர் நீடில், ரவுண்டு நீடில், 3-வே கேனுலா, டிஸ்போசபுல் கிளவுஸ், பல்ஸ், பி.பி. மானிடர், அனஸ்திடிக் ஈதர் போன்றவைகள் அறுவை சிகிச்சை அரங்கங்களில் வைக்கப்படவில்லை என்பதை ஆரம்ப காலத்தில் கண்டறிந்து நான் தொடுத்த வினா இது. இப்போது அனைத்து மருத்துவமனைகளுக்கும் தேவையான கருவிகள் வழங்கப்பட்டிருப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுச் சிறுநீரகம், மாற்று இதயம், மாற்றுக் கண் போன்றவற்றைப் பொருத்துவதற்கான நூதன அறுவை சிகிச்சைக்கான மருத்துவச் சாதனங்களைக் கொடுத்து வருகிறீர்கள். இப்போது மதுப் பழக்கம்

1997 ஏப்ரல் 24]

அதிகமாகி, மது அருந்துகின்ற மக்களுடைய கல்லீரல் பாதிக்கப்பட்டு, அந்தச் சிகிச்சைக்காக அவர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று பல லட்சக்கணக்கான ரூபாயைச் செலவு செய்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. எனவே நம்முடைய அரசு இந்த அறுவை சிகிச்சையைச் செய்வதற்கான, அதாவது 'லிவர் டிரான்ஸ்பிளான்டேஷன்' என்ற அறுவை சிகிச்சை செய்வதற்கு உண்டான வசதிகளை, கருவிகளை சென்னை, அரசு பொது மருத்துமனையில் அமைத்துத் தர ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மது அருந்துவதால் இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன என்று சொன்னார்கள். எனவே மது அருந்தாமல் இருக்கும்படி மக்களைக் கேட்டுக்கொள்ளலாம். அது ஒன்று. இரண்டாவது 'லிவர் டிரான்ஸ் பிளான்டேஷன்' பற்றிக் கேட்டார்கள். ஏற்கெனவே ஸ்டான்லி மருத்துவமனையிலே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, ஒருவருக்கு லிவர் டிரான்பிளான்டேஷன் செய்யப்பட்டு, மறுபடியும் அப்பல்லோ மருத்துவமனையிலே அவருக்கு ஆபரேஷன் செய்யப்பட்டு பொருத்தப்பட்டு இருக்கிறது. இன்னமும் அதற்கான டெக்னாலஜி, அதற்கு வேண்டிய வசதிகள் நம்முடைய நாட்டிலே வரவில்லை. இருந்தாலும் இதிலே கவனம் செலுத்தி, லிவர் டிரான்ஸ்பிளான்டேஷன் செய்வதற்கு அரசாங்கம் எதிர்காலத்திலே உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் மு. தேவராஜன்.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள இராயப்பேட்டை மருத்துவமனையில், அவசர சிகிச்சைப் பிரிவில் — இன்டென்சிவ் கேர் யூனிட் — 5 கருவிகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று மட்டுமே செயல்பட்டு வருகின்றது. பழுதுபட்ட மற்ற கருவிகளைச் சீர் செய்ய அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[1997 ஏப்ரல் 24

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரிலுள்ள சி.எம்.சி. மருத்துவமனையில் நோயாளிகளுக்கு ஒரு அவசர நிலை ஏற்படுகின்றபொழுது, டாக்டர்களை 'பேஜர்' மூலம் அழைக்கும் முறையை நீண்டகாலமாகக் கையாண்டு வருகின்றார்கள். அதேபோன்று, பொது மருத்துவமனைகளிலே அவசர காலங்களில் சிறப்பு டாக்டர்களை உடனடியாக அழைக்கும் வண்ணம் அழைப்புக் கருவிகள்—பேஜர்கள்—அவர்களுக்கு வழங்கப்படுமா அல்லது அதற்குப் பதிலாக 'செல்லுலார் ஃபோன்'-கள் அரசுத் தரப்பில் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன். அப்படி வழங்கினால், நிச்சயமாக அது ஒரு பயனுள்ள முறையாக இருக்கும். அதனைச் செலவினம் என்று கருதி அரசு கைவிடக் கூடாது என்ற கோரிக்கையையும் விடுத்து, இதற்கான விடையைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர நிமித்தமாக டாக்டர்களை அழைப்பதற்கு 'பேஜரையோ' அல்லது 'செல்லுலார் டெலிபோன்'-களையோ அவர்களுக்கு அளித்திட, இப்போதுள்ள சூழ்நிலையில், நிதிநிலையின் அடிப்படையில், முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. எம். விஜயகுமார்.

**திரு. கே. எம். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் உள்ள அறுவை அரங்கங்கள் அனைத்திற்கும் ஜெனரேட்டர் வசதி செய்து கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவில் இருக்கின்ற மருத்துவமனைகளிலும், சென்னையில் இருக்கின்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் அப்படிப்பட்ட வசதிகள் செய்து தரப்பட்டிருக்கின்றன. தாலுக்கா அளவிலுள்ள மருத்துவமனைகளில் அப்படிப்பட்ட வசதிகளைச் செய்து தரும் வகையில், ஜெனரேட்டர்கள் வழங்க முடியுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. மணிமாறன்.

**திரு. இரா. மணிமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட மருத்துவமனைகளில் எலும்பு முறிவு அல்லது தலைக்காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக நோயாளிகள் வரும்பொழுது, எக்ஸ் - ரே பிரிவில்

அதற்கான 'ஃபிலிம்' இல்லையென்று சொல்கிறார்கள். இரண்டு, மூன்று மாதகாலமாகத் தொடர்ந்து இந்த நிலை நீடித்து வருகின்றது. உரிய நேரத்தில் அந்த மருத்துவமனைகளுக்கு ஏன் எக்ஸ்ரே ஃபிலிம் வழங்கப்படவில்லை என்பதையும், காலதாமதத்திற்கான காரணம் என்ன என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எக்ஸ்ரே ஃபிலிம்' தட்டுப்பாடு இருந்தது உண்மைதான். ஆனால், இப்போது அந்தத் தட்டுப்பாடு நீங்கி, மருத்துவமனைகளுக்கான 'எக்ஸ்ரே ஃபிலிம்' வாங்கித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, பல மருத்துவமனைகளுக்கு தற்போது வாங்கித் தரப்பட்டிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுகூட சில பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. கூவாகம் என்னுமிடத்தில், அலிகளெல்லாம்—பாவம்—ஒன்று சேர்ந்து ஒரு பண்டிகை நடத்தியிருக்கிறார்கள். அலிகளை மீண்டும் ஆண்களாகவோ, பெண்களாகவோ மாற்றக்கூடிய அறுவை சிகிச்சை முறை சென்னை மருத்துவமனைகளிலே இருக்கிறதா, அதற்கான கருவிகள் இருக்கின்றனவா, அதற்கான மருத்துவர்கள் இருக்கிறார்களா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்; அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் கடைசி வரையிலும் ஆணாகவே இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலுள்ள அனைத்து அரசு பொது மருத்துவமனைகளிலே மற்ற பரிசோதனைக் கருவிகள், குறிப்பாக, ஸ்கேன், ப்ராகஸ்கோப் போன்ற கருவிகள் வழங்கப்பட்டுள்ளதா; இவற்றை வழங்குவதற்காக மருத்துவமனை வாரியாக எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது; இவற்றை விரைவிலே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா; குறிப்பாக, புறநோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துச் சீட்டுக்கள் தமிழில்

வழங்கப்படுகின்றதா; அவர்களுக்கு வழங்கப்படும் மருந்துகளின் விவரம் தமிழில் எழுதப்படுகின்றதா; இதைப்போல உள் நோயாளிகளுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது என்ன, துணை வினாவா? நீங்கள் மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற மாதிரி பேசிக் கொண்டிருக்கிறீர்கள். இப்படிப் பேசுவதற்கு நான் அனுமதிக்க மாட்டேன். மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்கேன்களைப் பொறுத்தவரையிலே, சென்னையிலே உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் வாங்கித் தரப்பட்டிருக்கின்றன. புறநோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துச் சீட்டுகளில் மருந்துகளின் பெயர் தமிழிலே எழுதப்படுகின்றதா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதுவரையில், சுமார் 60-லிருந்து 65 சதவிகிதம் மருத்துவர்கள் மருந்துகளின் பெயர்களைத் தமிழிலே எழுதுகிறார்கள். இன்னும் சிலர் ஆங்கிலத்திலே எழுதிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்த ஒரு கருத்தின்படி ஆங்கில மருந்துகளினுடைய பெயர்களை அப்படியே தமிழில் எழுதும்படி அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. அதை மொழி பெயர்க்க அவசியமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருத்துவமனைகளிலும் அதுவும் மைய மருத்துவமனைகளில் நவீன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லக் கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஆனால் அதேநேரத்தில் நமது சென்னை பொது மருத்துவமனையில் நீயூராலஜி டிபார்ட்மெண்டில் நவீன முறையில் பிராஸ்டேட் கிளாண்ட்-இல் வியாதி போன்ற வியாதிகளுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கான வசதி இல்லை என்ற மருத்துவமனையில் கூறுகிறார்கள். எனவே, ஏழைகள் விஜயா ஆஸ்பத்திரி போன்றவைகளுக்குப் போக வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்தக் குறையை நீக்குவதற்கு, ஏழை எளியவர்கள் அங்கேயே ஆபரேஷன் செய்து கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை துரிதமாக அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1997 ஏப்ரல் 24]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களேகூட சில தினங்களுக்கு முன்னால் சென்னை பொது மருத்துவனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கார்டியாலஜி பிளாக்கில் மிகச் சிறந்த முறையில் வசதிகள் இருக்கின்றன என்றும் நல்லமுறையில் கவனிக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். நீயூராலஜி டிபார்ட்மெண்டில் சில கருவிகள் ஆபரேஷனுக்காக தேவைப்படுகின்றன. அதுபற்றி அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாத இறுதிக்குள் வேண்டிய வசதிகளை அரசு செய்து தரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் தமிழகம் முழுவதிலும் இருக்கிற அரசு மருத்துவமனைகளில் மருந்துகள் இல்லை என்ற நிலை போக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரியது. நேற்றையதினம் ஒரு கேள்வி கேட்டேன். இந்தக் கோரிக்கையோடு சேர்த்து கூத்தாநல்லூர் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை வசதிகளோடு கூடிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டேன். நான் பணிவன்போடு வேண்டிக்கொள்வது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது—அவர் எங்களுடைய மாவட்டத்திற்கு வருகிற வாய்ப்பு இருப்பதாக அறிகிறேன்.–நேரடியாக கூத்தாநல்லூர் மருத்துவமனையை நீங்கள் பார்வையிட்டு அதன் பின்னர் ஏதாவது அதற்கு உதவி செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே பதில் சொல்லியிருக்கிறேன். கூத்தாநல்லூர் மருத்துவமனையில் போதுமான படுக்கைகள் இருக்கின்றன. நோயாளிகள் இல்லை. அது ஒரு வகையில் நாட்டுக்கு நல்லதுதான். நோயாளிகளுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்பது நாட்டுக்கு நல்லது தான். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு ஒரு திருமணத்திற்கு, வரும் 27 ஆம் தேதி அங்கு வருகின்ற நேரத்தில் நிச்சயமாக கூத்தாநல்லூர் மருத்துவமனைக்கு வந்து தேவைப்பட்டால் வசதிகள் செய்து தருவதற்குத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். சந்தானம்.

|1997 ஏப்ரல் 24

**திரு. எல். சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சிறுநீரக அறுவை சிகிச்சை' இருதய அறுவை சிகிச்சை போன்றவைகளை எல்லாம் வசதி படைத்தவர்கள்தான் செய்துகொள்கின்ற நிலை இருக்கிறது. ஏழைகளாக இருக்கிறவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்தால் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படுகின்றதா? இல்லை என்றால், இனிமேலாவது அப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகள் இலவசமாக ஏழை மக்களுக்குக் கிடைக்க அரசு நடவடிக்கையை மேற்கொள்ள முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவமனைகளில் இப்படிப்பட்ட அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. சென்னை பொது மருத்துவமனையில், ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இதுபோன்ற அரசு மருத்துவமனைகளில் இந்த அறுவை சிகிச்சைகள் நடைபெறுகின்றன. ஆனால் சிலர் தனியார் மருத்துவமனைகளில் போய் அங்கே அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே நிவாரண நிதி கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து அதிகபட்சம் 25 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்று முடிவு எடுத்து பலருக்கு இந்த உதவி இதுவரையில் கிடைத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். அந்த மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடைபெற்று இருக்கிறதா, அந்த நோயாளி இன்னும் உயிரோடு இருக்கிறாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் அதை கொஞ்சம் எச்சரிக்கையோடு சொன்னேன். ஒரு அறுவை சிகிச்சை நடைபெற்று

1997 ஏப்ரல் 24]

10 நாட்கள் பொறுத்து அந்த நோயாளி இறந்து விட்டார். அப்படி இறந்து விடுவதைவிட., காப்பாற்றுகின்ற வகையில் நல்ல டெக்னாலிஜியை, அதற்கு வேண்டிய வசதிகளைப் பெற்று அப்படிப்பட்ட அறுவை சிகிச்சை செய்வது நல்லது என்ற அடிப்படையில்தான் இப்போது அந்த அறுவை சிகிச்சைகள் எங்கேயும் செய்வது இல்லை.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூத்தாநல்லூர் மருத்துவமனைக்கு வருகை தருவதாக அறிவித்திருக்கிறார்கள். 27-ம் தேதி திருவாரூரிலிருந்து குடந்தைக்கு வருகிற வழியிலே இருக்கிற குடவாசல் மருத்துவமனையையும் வந்து பார்வையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக ஒரு நாளைக்கு அந்த மருத்துவமனைக்கு வருவதற்கு முயற்சிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய மாவட்டத்திற்கு வருவதாகச் சொல்கிறார்கள். நீடாமங்கலத்திலேயுள்ள மருத்துவமனையிலே ஒரு மருத்துவர்தான் இருக்கிறார். போதுமான மருத்துவர்கள் இல்லை. ஸ்கேன் இருக்கிறது; 32 படுக்கைகள் கொண்ட வசதிகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் மருத்துவர் இல்லை. அதேபோல், ஒரத்தநாட்டிலேயும் மருத்துவர்கள் இல்லை. உடனடியாக அமைச்சர் அவர்கள் அங்கு வருவதற்குள்ளாக, அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்த மாவட்டத்திற்கு வருவதற்கும், மருத்துவர்களை நியமிப்பதற்கும் சம்பந்தம் கிடையாது. ஏற்கனவே, தமிழ்நாட்டிலே 600 மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன்; நம்முடைய தேர்வாணையம், நேர்காணலுக்காக மருத்துவர்களை அழைத்திருக்கிறது. அது,

மருத்துவர்களின் பட்டியலைத் தயார் செய்து, அநேகமாக மே மாதம் 15-ம் தேதிக்குள்ளாக, அரசுக்குக் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறது. அப்படி அந்தப் பட்டியல் வந்தவுடன் ஒருவார காலத்திற்குள்ளாக, எங்கெங்கே மருத்துவர்கள் இல்லையோ, அங்கேயெல்லாம் அந்த மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய தஞ்சை மாவட்டத்திலே இன்னும் துணை வினா கேட்காமல் பாக்கி இருப்பவர், திரு. பழனிசாமி அவர்கள் ஒருவர்தான்; அவரும் வினாவைக் கேட்டுவிடட்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருதய அறுவை சிகிச்சைக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை கொடுப்பதைப் போன்ற புற்று நோயாளிகளுக்கும் அவர்களுடைய நோயைக் குணப்படுத்துவதற்குத் தமிழக அரசு நிவாரணம் ஏதாவது வழங்குகிறதா? தொகுதி மக்கள் என்னிடத்திலே நிறைய பேர் வந்து, சிபாரிசுக் கடிதங்களை அதற்காகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதுமாதிரி நிவாரணம் ஏதேனும் அரசால் வழங்கப்படுகிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்றுநோய்க்கு, அப்படிப்பட்ட நிதியுதவி முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து இதுவரை கொடுக்க இயலவில்லை. ஏனென்றால், புற்றுநோய் நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 7 இலட்சம் ரூபாய் செலவாகிறது. ''அப்போலோ' மருத்துவமனையிலேதான், அந்த வசதி இப்போது தமிழ்நாட்டிலே இருக்கிறது. தமிழ்நாட்டிலே என்பதோடு, தென்னிந்தியாவிலேயே அந்த மருத்துவமனையிலேதான் இருக்கிறது. வெளிநாடுகளிலே போய், அதே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால், ஒரு கோடி ரூபாய் செலவாகுமென்று சொல்கிறார்கள். எனவே, அந்த அளவுக்கு 7 இலட்சம், 8 இலட்சம் ரூபாய் செலவு செய்து, ஏழைகள், அந்த அறுவை சிகிச்சைக்குப் போவதில்லை. எனவே, அதுபற்றி இதுவரையிலேயும் அரசு பரிசீலிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 645, டாக்டர் வே. ஆல்பன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்